

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 73 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 05 – ஞாயிற்றுக்கிழமை 22 அக்டோபர் 2023 – வெளியூர் 16+24 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 73: Thiruvalluvar Year - 2054 - Ayppasi 05 - Sunday 22 October 2023 - Dak 16+24 Pages ₹ 5.00


# “நீட் விலக்கு, நம் இலக்கு”!

## மாபெரும் மக்கள் இயக்கத்தைத் தொடங்கி வைத்தார் கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின்!




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2023) கழக இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான நீட் விலக்கை வலியுறுத்தும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து, நீட் விலக்கை வலியுறுத்தி இந்திய குடியரசுத் தலைவர் அவர்களுக்கு கையெழுத்திட்டு “நீட் விலக்கு நம் இலக்கு” பெட்டியிலிட்டார்.

**சென்னை, அக். 22 - நீட் நுழைவுத் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி தி.மு.க. சார்பில் மாபெரும் கையெழுத்து இயக்கம் தொடங்கியுள்ளது. இந்த கையெழுத்து இயக்கத்தினை கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

நீட் நுழைவுத் தேர்வால், மருத்துவராக வேண்டும் என்ற லட்சியத்துடன் படித்து வந்த தமிழ்நாட்டு மாணவர்களில் 20க்கும் மேற்பட்டோர் தங்களின் உயிரை மாய்த்துக்கொண்டுள்ளனர். தமிழ்நாட்டில் தி.மு.க. அரசு அமைந்த பிறகு, நீட் தேர்வை ரத்து செய்யக் கோரி பல்வேறு வகையில் ஒன்றிய அரசுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகிறது. தி.மு.க. இளைஞர் அணி, மாணவர் அணி, மருத்துவ அணி சார்பில், நீட் தேர்வை ரத்து செய்யக்கோரி, அண்மையில் தமிழ்நாடு தழுவிய அளவில் மாபெரும் உண்ணாநிலை அறப்போராட்டம் நடைபெற்றது.

> **“நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையில், தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில், மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெறுகிறது.”**

அதன் தொடர்ச்சியாக, நீட் தேர்வை ரத்து செய்ய வேண்டும் என்ற தமிழ்நாட்டு மக்களின் மனநிலையை ஒன்றிய அரசுக்கு உணர்த்தும் வகையில், தி.மு.க. இளைஞரணிச் செயலாளரும், அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் முன்னெடுப்பில், மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெறுகிறது. சென்னை செனாய் நகரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு, நீட் விலக்கு! நம் இலக்கு! எனும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தை தொடங்கி வைத்து முதல் கையெழுத்தை போட்டார்.

நீட் தேர்வை ஒழிக்க மக்கள் போராட்டமாக மாற்றும் வகையில் மாபெரும் மக்கள் இயக்கமாக கையெழுத்து இயக்கம் தொடங்கியுள்ளது. நீட் ஒழிப்புக்கான இந்த முன்னெடுப்பு, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுகளில், பொதுமக்கள், பெற்றோர்கள், மாணவர்கள், கல்வியாளர்கள், சமூக அமைப்புகள், அரசியல் கட்சித் தலைவர்கள் என அனைத்துத் தரப்பினரும் பங்கேற்று கையெழுத்திட்டு வருகின்றனர்.

அதன்படி, 50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்துகள் பெறப்பட உள்ளன. தமிழ்நாட்டின் கல்வி உரிமையையும் நம் மாணவர்களின் மருத்துவராகும் கனவையும் காப்பதற்காக இடப்படும் ஒவ்வொரு கையெழுத்தும் குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளது.

---

# நாங்கள் ஆரிய ஆதிக்கத்திற்குத்தான் எதிரிகள்; ஆன்மிகத்திற்கு நிச்சயமாக அல்ல!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டமான பிரகடனம்!

**சென்னை, அக். 22 - “நாங்கள் ஆரிய ஆதிக்கத்திற்குத்தான் எதிரிகள்; ஆன்மிகத்திற்கு நிச்சயமாக அல்ல” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திட்டவட்டமாக பிரகடனப் படுத்தியுள்ளார்.**

நேற்று (21.10.2023) காலை, கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் கழகத் தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் சென்னை செயின்ட் ஜார்ஜ் ஆங்கிலோ இந்தியன் பள்ளி வளாகத்தில் நடத்தப்பட்ட “#Wing2PointO - சமூக வலைதளத் தன்னார்வலர்கள் சந்திப்பு” இல் கலந்துகொண்டார்.

முன்னதாக, கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முன்னெடுப்பில் மாணவரணி மற்றும் மருத்துவரணியுடன் இணைந்து நடத்தப்படும் நீட் தேர்வுக்கு எதிரான கையெழுத்து இயக்கத்தில் கழகத் தலைவர் அவர்கள் தமது கையெழுத்தையும் பதிவு செய்தார்.

இந்நிகழ்வில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய சிறப்புரை வருமாறு: -

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா அவர்கள் என்னிடம் வந்து, “சோஷியல் மீடியாவில் தீவிரமாக செயல்படும் தன்னார்வலர்கள் உங்களைச் சந்திக்க வேண்டும்” என்று சொன்னார். அவர் சொன்ன உடன், “அவர்களைச் சந்திக்க நான்தான் மிகவும் ஆசையாக இருக்கிறேன்” என்று சொல்லி, உங்களைச் சந்திக்க இன்றைக்கு வந்திருக்கிறேன். என்னுடைய பெயர் - நான் யார், என்னுடைய பயோடேட்டா என்ன எல்லாம் உங்களுக்கு நன்றாக தெரியும். ஆனால், உங்களில் பலரின் பெயர் கூட எனக்குத் தெரியாது.

சிலரின் ஃபேஸ்புக் - ட்விட்டர் ஐடி தெரியும். ஆனால், அது இவர்கள்தான் என்று தெரியாது. பெரும்பாலும், உங்கள் அனைவரின் பதிவுகளையும் என்னுடைய டைம்லைனில் படித்திருப்பேன்; ரசித்திருப்பேன்; சில நேரம், “அடடா! எவ்வளவு நன்றாக எழுதியிருக்கிறார்கள்” என்று வியந்திருக்கிறேன், சிரித்திருக்கிறேன்;




கழகத் தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (21.10.2023) சென்னை, ஷெனாய் நகரில் நடைபெற்ற கழக தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் விங் 2.0 ஒருங்கிணைப்பில் சமூக வலைதள செயல்பாட்டாளர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றினார். இக்கூட்டத்தில், கழக தகவல் தொழில்நுட்ப அணிச் செயலாளரும், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சருமான முனைவர் டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர் மகேந்திரன், மாநில துணைச் செயலாளர் கார்த்திக் மோகன், ஆலோசகர் கோவி.லெனின், சென்னை மண்டல பொறுப்பாளர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கும்மிடிப்பூண்டி சேகர் மற்றும் கழக தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சிலர் நீண்ட பதிவுகள் எழுதுவீர்கள். சிலர் இரத்தினச் சுருக்கமாக, க்ரிஸ்ப்பாக எழுதுவீர்கள். சிலர் மீம்ஸ் போடுவீர்கள். சிலர் பழைய வரலாற்றையெல்லாம் மறுபடியும் ஞாபகப்படுத்துவீர்கள். இவ்வாறு ஒவ்வொருவருக்கும் ஒரு ஸ்டைல்!

### அது எல்லாமே தி.மு.க. ஸ்டைல்!

ஆனால், அது எல்லாமே தி.மு.க. ஸ்டைல்! அதனால், உங்கள் ஊர் பெயர் தெரியவில்லை என்றால் என்ன? நாம் எல்லோரும் தி.மு.க.காரர்கள் தானே! தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகள்தானே! உங்களில் ஒருவன்தான் நானும்!

இந்த பந்தமும் - பாசமும் மட்டும் என்றைக்கும் மாறவே மாறாது! என் டைம்லைனில் சிலரின் பதிவுகள் மிஸ் ஆனாலும், ஐ.டி.விங், செய்தித் துறை, உளவுத்துறை, என்னுடைய நண்பர்கள் என்று பலரும் உங்களின் பதிவுகளை எனக்கு அனுப்பி வைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அந்த வகையில்,


தொடர்ச்சி 4ஆம் பக்கம்